முருகப்பெருமான் துணை

**மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.03.2024**, புதன்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
   அறம் காத்திடும் தேசிகா
   அவனிதனில் அற்புதம் நிகழ்த்த
   ஆறுமுகனாய் வந்த அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது சேல் திங்கள்
   வரங்களென முன்னான்கீர் திகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 14 ம் நாள், 27.03.2024, புதன்கிழமை)
   வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை புலிப்பாணிச்சித்தரும்
   அருளுவேன் உலக நலம்பெற
   வாசிவென்ற ஞானிகள் படை
   வலம்வந்து அரங்கனோடிருக்க
4. இருக்கவே கலியுக மக்களும்
   ஏற்று அரங்கமகான் வழிவர
   கருத்தாக நல் ஞான உபதேசங்களை
   கலியினில் வேதமாக ஏற்று
5. ஏற்றுமே தொடர்ந்து வந்து
   எல்லாமே குருவருளே என
   ஆற்றலான அரங்கமகானிடம்
   ஆசி தீட்சை அடைந்து வருவதுடன்
6. வருவதுடன் ஞானிகள் பேரில் பூசை
   வல்லமைபட மக்களும் செய்து
   தருமகுணம் தானும் பெருக
   தரணியில் அரங்கன் காட்டும்
7. காட்டுகின்ற அன்னதானம் தன்னை
   கட்டளையாக ஏற்றுச் செய்து
   வாட்டமற தருமசாலைகள் பல
   வையகம் எங்கும் கிளைகளாக

8. ஆகவே துவக்கி சேவை வளர்க்க
அகிலமே தரும பலம் கூடி
வகைபட தருமவான்கள் கூட்டம்
வலம்வர உலகம் தன்னில்

9. தன்னிலே கருமவினை வென்று
தரணியோர் ஞானம் தேடி
அண்ணல் அரங்கன் ஆசிபட
ஆற்றலும் ஞானமும் கூடியே

10. கூடியே அழியாமை என்கின்ற
குருவருள் திருவருளாக நிரம்பிட
நாடியே அரங்கன் தேடிடும்
ஞானிகளாக நிலைகள் சிறந்து

11. சிறந்துமே உலக மாற்றம்தன்னை
செப்பிடுவேன் அரங்கன் அவதார
அருந்தவ நோக்காக நிறைவேற்றுவர்
அருளிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—